**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**

**Deposition of Witness**

C.C. 137 /2017

PW-1 30-01-2024

| | |
|---|---|
| Name | சண்முகத்தாய் |
| Husband's Name | சமுத்திரராஜ் |
| Village | அய்யாக்கோட்டையூர் |
| Taluk | எட்டயபுரம் |
| Caste | – |
| Calling | கூலி |
| Religion | இந்து |
| Age | 45 |

(A1 to A4 present.)

**<u>முதல்விசாரணை</u>**

1) நான் தற்போது எட்டயபுரம் தாலுகா அய்யாக்கோட்டையூர் கீழத்தெருவில் வசிக்கிறேன். நான் மகாத்மா காந்தி ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் வேலை செய்கிறேன். எங்கள் குடும்பத்திற்கும் எதிரிகள் குடும்பத்திற்கும் எங்கள் வீட்ற்கு எதிரே உள்ள பொது இடம் சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வந்தது.

2) அந்த இடத்தில் ஒரு ஓலை குடிசை கட்டி பயன்படுத்தி வருகிறோம். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை. மாலை 4 மணிக்கு என் வீட்டு முன்பு நின்றுகொண்ருக்கும்போது 3ம் எதிரி பன்னீர் செல்வம், 1ம் எதிரி குருசாமி, 2ம் எதிரி ஆத்தியம்மாள், பன்னீர் செல்வம் மனைவி 4ம் எதிரி பொன்னி ஆகியோர் என்னை பார்த்து உனக்கு இங்கு என்ன வேலை என்றும் தேவிடியா என்று ஆபாசபான வார்த்தைகளால் பேசினார்கள்.

3) ஆத்தியம்மாள் என்னை அடித்தார். 1ம் எதிரி குருசாமி கம்பை எடுத்து அடிக்க வந்தார். சண்டைக்க காரணம் 1மற்றும் 2 ம் எதிரிகள் ஆவார். என்னை

தலைமுடியை பிடித்து பன்னீர் செல்வம் மனைவி என் தலைமுடியை பிடித்து இழுத்து அடித்தார். சாட்சிகள் முருகலட்சுமி, ஈஸ்வரி ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு வந்த போலிசார் என்னை விசாரித்து எனக்கு எழுத படிக்க தெரியவில்லை என்பதால் நான் சொல்ல சொல்ல எழுதினார்கள்.

4) அந்த புகார்வாக்குமூலத்தில் உள்ள சண்முகத்தாய் என்ற கையொப்பம் என்னுடையது . **அந்த புகார் வாக்கமூலம் முழுவதும் அசா ஆ 1 ஆக குறியீடுசெய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை- (எதிரிகள் தரப்பிற்கு சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய வாய்பளிக்கப்பட்டது குறுக்குவிசாரணை இல்லை என்று கூறினார்)**

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்),B.பீட்டர்,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.